பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 2 (15—5—68) புதன் ★ வெளியூர் : வைகாசி 3 (16—5—68) வியாழன் [இதழ் : 277

தீவிர கவனம் செலுத்துவது அவசியம்!

காஞ்சிபுரம், மே 14—

"நம்மைவிட அமெரிக்காவில் உள்ளவர்களோ, மற்ற நாடுகளில் உள்ளவர்களோ 'கெட்டிக்காரர்கள்' என்று மட்டுமே சொல்ல முடியும்; ஆனால் அவர்களை விட நாம் எந்த விதத்திலும் குறைவானவர்களல்லர்!

"நாம், வைரம் -- ஆனால் பட்டை தீட்டப்படவில்லை! சிறந்த ஓவியம் இருக்கிறது -- ஆனால் தூசி படிந்திருக்கிறது! குளம் இருக்கிறது -- படிக்கட்டு இல்லை! கோட்டை இருக்கிறது -- அதில் ஒளி இல்லை!

"இவையெல்லாம் திருத்தியமைப்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்!"

— முதலமைச்சர் அண்ணா
(நகராட்சி வரவேற்பில்)

எண்ணத்தில் மாற்றம் ஏற்படட்டும்

நிபுணர்களுக்கு முதலிடம் தரப்படுவது அவசியம்

நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணை எது?- முதலமைச்சர் அண்ணா தரும் அறிவுரை

காஞ்சிபுரம், மே 14 -

"அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளைப்போல் நம்முடைய நாடும் தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற வேண்டுமானால், தொழில் துறைக்கும் -- தொழில்துறை வல்லுநர்களுக்கும், கல்வித் துறைக்கும் -- கல்வித் துறை வல்லுநர்களுக்கும், ஆராய்ச்சித் துறை -- மருத்துவத் துறை -- பொறியியல் துறை ஆகியவற்றின் நிபுணர்களுக்கும் முதலிடம் -- முக்கியத்துவம் தரப்படவேண்டும். அந்த அளவுக்குச் சமுதாயத்தின் எண்ணத்தில் -- நோக்கத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

"நமது நாட்டில் அரசியலுக்கு -- அரசியல்வாதிகளுக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் -- முதலிடம் தரப்படுகிறது; அப்படித் தரப்படும் முதலிடம் குறைக்கப்பட வேண்டும். வெறும் அரசியல்வாதிக்கு அளவுக்கு மீறிய மதிப்புத் தரப்படுவதால், மற்ற துறைகளின் வளர்ச்சிக்கு இங்கு மதிப்பில்லாமல் போய்விடுகிறது!

"20 ஆண்டுகளுக்கு முன்பு அரசியல்வாதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது சரியாக இருக்கலாம்; ஆனால், அந்த நிலை இனி மாறவேண்டும்; அரசியல்வாதிகளுக்கு அளிக்கப்படுவதுபோலவே மற்றவர்களுக்கும் சம மதிப்பு அளிக்கப்பட வேண்டும்.

"கல்வி -- தொழில் -- பொருளாதாரம் -- உள்ளாட்சி, நகராட்சி ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கொண்டுதான், ஒரு நாட்டின் முன்னேற்றத்தை பிற நாடுகளில் மதிப்பிடுகிறார்கள். இத்துறையில் பத்திரிகைகளுக்கும் பங்கு உண்டு; எஞ்சினீயரிங் -- விஞ்ஞானத் துறைகளில் உள்ள வல்லுநர்கள் பற்றிய விவரங்களை வெளியிட்டு, அவர்களுக்கும் -- பொதுமக்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்த வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், காஞ்சி நகராட்சி அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் கருத்தறிவித்ததாவது :—

முன்னேற்றப் பாதையில் செல்லும் நிலை காணீர்!

"நான் பயணம் செய்த பல நாடுகளில் இயற்கை வளம் மெத்தக் குறைவாக இருப்பதைக் கண்டேன்!

இயற்கை வளம் குறைவாக இருப்பினும், வாழ்க்கை வளம் மேலோங்கி இருப்பதையும் கண்டேன்!

செல்வம் கொழிக்கும் பகுதி அமெரிக்கா; ஆனால் அந்த அமெரிக்காவையும் மிஞ்சும் வகையில்—அந்த அமெரிக்காவே ஆச்சரியப்படும் வகையில் ஜப்பான் வளர்ச்சியடைந்திருப்பதைக் கண்டேன்!

இயற்கை வளம் குறைவாக இருந்தபோதிலும் -- இயற்கை



யின் சீற்றம் இருந்தபோதிலும் -- முன்னேற்றப் பாதையில் நடைபோடும் ஜப்பானை நாம் பின்பற்ற வேண்டும்.

உழைப்பதைக் 'கடமை'யெனக் கொண்டுள்ளனர்

ஜப்பான் முன்னேறியதற்குக் காரணம், அவர்கள், தொழிலுக்குத் தரும் மதிப்பும் கடின உழைப்புமேயாகும்.

உழைப்பதைக் கடமையெனக் கொண்டுள்ளனர் ஜப்பானியர்!

நம் நாட்டிலும் உழைக்கிறார்கள் — கடுமையாகவே உழைக்கிறார்கள்; ஆனால் உழைப்புக்குத் தக்க பலனையடைவோம்' என்ற உறுதி சமுதாயத்தில் இல்லை; அந்த உழைப்புக்குத் தக்க பலனும் கிடைப்பதில்லை!

இவைகளுக்குரிய காரணங்களில் ஒன்று—நாம் மனித உழைப்பை மட்டுமே நம்பியிருக்கிறோம்; அவர்களைப் போல் மனித உழைப்புடன் இயந்திர உழைப்பை இணைத்திடுவதில்லை!

நகராட்சி அதிகாரம்

'நகராட்சிகளுக்கு அதிக அதிகாரம் தரவேண்டும்' என்ற கோரிக்கையைக் குறிப்பிட்டுப் பேசுகையில் முதலமைச்சர் கூறியதாவது: -

'இதுபற்றிக் கவனிக்கத் தனி குழு அமைத்துப் பரிசீலனை செய்யப்படுகிறது; அந்தக் குழு செய்யக்கூடிய சிபாரிசுகளைப் பரிசீலித்து, அந்தப் பரிந்துரைகளுக்கு ஏற்ப சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

தங்களுடைய நகரங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதன் மூலமாகவும், நமது கோயில்களின் வரலாற்றை விளக்கக் கூடிய வழிகாட்டிகளை ஏற்பாடு செய்வதன் மூலமாகவும், உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து வருமானத்தைப் பெருக்க முடியும்."

நிகழ்ச்சிகள்

காஞ்சிபுரம் நகராட்சி மண்டபத்தில் வரவேற்பும், தேநீர் விருந்தும் நடைபெற்றது.

நகராட்சித் தலைவர் திரு. ஏ. கே. தங்கவேலர் வரவேற்பு உரையைப் படித்து அறிஞர் அண்ணா அவர்களிடம் அளித்தார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு எஸ். கே. சம்பந்தம், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மின்சாரத்துறை பொறியியல் மேற்பார்வையாளர் அவர்களின் மகள் சிறுமி சாந்தியின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நடனமாடிய சிறுமி சாந்திக்கு அறிஞர் அண்ணா அவர்கள் தங்கப் பதக்கம் வழங்கினார்.

நகராட்சித் துணைத் தலைவர் திரு. சம்பந்தம் அவர்கள் நன்றி கூறினார்.

உழைப்பின் பலன் முழுவதுமாகக் கிடைக்க...

காஞ்சிபுரம், மே 14 -

"உழைப்பின்மூலம் கிடைக்க வேண்டிய பலன், நம் நாட்டில் முழுவதுமாகக் கிடைக்கவில்லை!

"மனித உழைப்பு, இயந்திரங்களின் துணை ஆகியவற்றை விஞ்ஞான அடிப்படையில் இணைப்பது அவசியம்; அப்போதுதான், உழைப்பின் பலன் முழுவதுமாகக் கிடைக்கும்!"

--முதலமைச்சர் அண்ணா

டெல்லிக்கு தெளிவு பிறக்கிறது!

புதுடில்லி, மே 15—

இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் இந்தியைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தற்போது மத்திய அரசு ஈடுபடப்போவதில்லை என்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நாட்டிலுள்ள எல்லா உயர் நீதிமன்றங்கள், தலைமை நீதிமன்றம் ஆகியவற்றில் ஒரே சீரான நிர்வாகத்தை நடத்த ஒரு பொது மொழி நிச்சயம் தேவை என்பதை மத்திய அரசு உணர்ந்திருக்கிறது.

"தற்போது எல்லா உயர் நீதிமன்றங்களிலும் ஆங்கிலமே பயன்படுத்தப்படுவதால், இந்தியத் தலைமை நீதிமன்றத்திலும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டியது இன்றியமையாததாகும்" என்றும் மத்திய அரசு கருத்துக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

காங்கிரசார் எதிர்ப்பது விதியின் கொடுமையாம்

புதுடில்லி, மே 15 -

"நாட்டு விடுதலைப் போராட்டத்தின்போது, மதுக் கடைகளின் முன்பு மறியல் செய்தவர்களே இப்போது பல்வேறு மாநிலங்களில், 'அமைச்சர்கள்' என்ற அதிகாரத்தின் துணை கொண்டு மதுவிலக்கை எதிர்ப்பது வாடிக்கையாகிவிட்டது; இது விதியின் கொடுமையாகும்!

"கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகரித்துவிட்டது என்பதற்காகவும், அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்பதற்காகவும் மீண்டும் கள்ளுக் கடைகளைத் திறக்கச் சொல்வது சரியல்ல!

என்று துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

உற்பத்தியாளருக்குப் பலன் கிடைக்காததற்குக் காரணம் என்ன?

மாராட்டிர முதலமைச்சரின் மறைமுகக் குற்றச்சாட்டு?

பம்பாய், மே 15—

"பருத்தி உற்பத்தியாகி விற்பனைக்காக மார்க்கெட்டுக்கு வரும்போது, மத்திய அரசு எல்லாவிதமான கட்டுப்பாடுகளையும் விதித்து, உற்பத்தியாளருக்கு எவ்விதப் பலனும் கிடைக்க முடியாமல் செய்து வருவதிலிருந்து, 'விவசாயிகள், நியாயமான வருவாய் பெறக்கூடாது' என்று மத்திய அரசு நினைப்பதுபோல் தோன்றுகிறது!

"மத்திய அரசின் கட்டுப்பாட்டு உத்தரவுகளால், தரகர்களே இலாபம் அடைகின்றனர்! இந்த அவல நிலையை மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங்கிடம் மனவேதனையுடன் எடுத்துச் சொன்னேன்.

"உழைப்புக்கு மதிப்புத் தரப்பட வேண்டியதன் அவசியத்தை அனைவரும் உணருவது அவசியமாகும்"

என்று மாராட்டிர மாநில முதலமைச்சர் வி. பி. நாயக், 'சனநாயகத்தில் கூட்டுறவும் பஞ்சாயத்தும்' என்பதுபற்றி நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில், மத்திய அரசின் மீது மறைமுகமாகக் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

நிர்வாகம் திறமையாக இயங்காததற்குக் காரணம் என்ன?

காஞ்சிபுரம், மே 14—

காஞ்சிபுரம் நகராட்சி அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், நிர்வாகத் துறையில், திறமையைப் பற்றிக் குறிப்பிட்டதாவது :—

"பிற நாடுகளில், அந்தந்த இலாகாக்களின் மட்டத்திலேயே தலைமை அதிகாரிகளே பொறுப்பு எடுத்துக் கொண்டு முடிவுகளைச் செய்கிறார்கள்; அதனால்தான் அங்கெல்லாம், நிர்வாகம் திறமையாக இயங்குகிறது!

"இங்கோ, அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலுள்ள அதிகாரிகளைக் கலந்தாலோசித்து--சில வேலைகளில் கபினெட் கூட்டம் வரையிலும் சென்று முடிவு செய்யப்படுகிறது; இதனால் திறமை பாதிக்கப்படுகிறது!

"தாமதமாகச் செயல்பட்டாலும் இப்போதுள்ள அமைப்பு முறையை உடனடியாக மாற்றியமைத்துவிட முடியாது; ஆனால், சற்று வேகத்தை ஏற்படுத்த வேண்டும்!"

நம் நாடு

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 2 (15—5—68) புதன்

குறைமதியினருக்குக் காணிக்கை

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், அமெரிக்காவிலும் ஜப்பானிலும் நான்கு கிழமைகள்வரை சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் தாயகம் திரும்பியுள்ளார். நான்கு கிழமைகள்வரை தங்களைப் பிரிந்திருந்த தலைவரை, தலைநகர மக்கள் தக்க முறையில் வரவேற்றுள்ளனர்.

தமது வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் முடித்துக்கொண்டு திரும்பியுள்ள அறிஞர் அண்ணா அவர்களுக்குத் தலைநகர மக்கள் தந்துள்ள வரவேற்பும், பாராட்டும், 'தமிழக முதலமைச்சர்' என்ற தகுதிக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது எனக் கருதுவது, சிறிதளவுக்கே உண்மையாகும். தங்கள் இதயகமலத்தில் இடம்பெற்றிருக்கின்ற தமிழகத்தின் தலைமகனுக்கு -- திராவிடத்தின் ஒப்பற்ற தனித் தலைவனுக்கு ஆற்ற வேண்டிய கடமையைத் தலைநகர மக்கள் மிகக ஆர்வத்துடன் ஆற்றியுள்ளனர் எனக் கொள்ளுவதுதான் முழு உண்மையாகும்.

தமது வெளிநாட்டுச் சுற்றுலாவின்போது நமது அண்ணா அவர்கள் சென்ற இடங்கள் அனைத்திலும் -- ஆங்காங்கே இருக்கக்கூடிய தமிழ் மக்கள், அகமும் முகமும் மலர வரவேற்றிருக்கின்றனர். அண்ணா அவர்களைக் கண்டதிலும், அவருடன் அளவளாவ வாய்ப்பினைப் பெற்றதிலும் அவர்கள், பெறுதற்கரிய பெரும் பேற்றினைப் பெற்றதாக மகிழ்ந்திருக்கின்றனர்.

வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தம்மைக் கண்டதிலும், தம்முடன் பரிவுகாட்டி அன்புரையாடியதிலும் அம்மக்கள் கொண்ட மகிழ்ச்சியினைக் கண்ட அண்ணா அவர்கள் கொண்டிருக்கக்கூடிய மகிழ்ச்சி, நமது கற்பனைக்குள் அடங்கக்கூடியதல்ல. அண்ணா அவர்களின் இயல்பைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றவர்களாலேயே, அவர் பெற்றுள்ள மகிழ்ச்சியை மதிப்பிட்டு உணர்ந்து கொள்ள முடியும்.

வெளிநாடுகளில் அண்ணா அவர்களைக் கண்ட தமிழ் மக்கள் வெளிப்படுத்திய பரிவும் கனிவும், பற்றும் பாசமும், அண்ணா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதைத் துவக்கமாகக் கொண்டிருப்பதல்ல. அண்ணா அவர்கள் பொதுவாழ்வில் கால்வைத்த நாள்தொட்டு, தம் எழுத்தாலும் சொல்லாலும் செயலாலும் குவித்துள்ள குன்றுப் புகழே, வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்களை, பிறர் எவரிடமும் வைத்தில்லாத பேரன்பை அவர்பால் வைத்திருக்கச் செய்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

நமது ஒப்பற்ற தலைவர்--நமது குடும்பத்தின் மூத்தவர்--நமது நெஞ்சினை உறைவிடமாகக் கொண்டிருப்பவர்—நம்மால் புகழ்ந்து பாராட்டப்படுபவர்—என்ற காரணத்தால், அண்ணா அவர்களின் அமெரிக்கப் பயணத்தையும், அவர் அங்கு இந்தியாவின் புகழை எடுத்துக்காட்டிய தனித் திறமையையும், நாம், 'பலபட சிறப்பித்துக் கூறுகிறோம்' எனக் குறைகூறக்கூடிய சிறுமதியாளர்கள் இங்கு நிரம்ப உண்டு. எனவே, அத்தகையவர்கள் அண்ணா அவர்களின் தனித் தன்மையைத் தெரிந்துகொள்வதற்காகவும், தங்கள் தங்கள் தவறை உணர்ந்து தங்களைத் திருத்திக்கொள்வதற்காகவும், 'பயனுள்ள பயணம்' எனத் தலைப்பிட்டு, 'நவமணி' இதழ் தீட்டியுள்ள தலையங்கப் பகுதியிலுள்ள சில கருத்துக்களை இங்கு மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம் :—

"சுமார் நாலு வார காலம் வெளிநாடுகளில்—குறிப்பாக அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் தமிழகம் திரும்பியுள்ளார்--முதலமைச்சர் அண்ணாதுரை.

"மத்திய மட்டத்தில் உள்ள அரசுத்துறைத் தலைவர் அல்லது அரசியல் தலைவரின் வெளிநாட்டுப் பயணத்துக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் அண்ணாதுரையின் விஜயத்துக்கும் தரப்பட்டிருக்கிறது.

"ஒரு இராஜ்யத்தின் அரசுத் துறைத் தலைவர் என்ற அந்தஸ்துடன் அவர் சென்றிருந்தால், அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கு இத்தனை முக்கியத்துவம் தரப்பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான். ஒரு இராஜ்யத்தின் முதல் மந்திரியோ, சாதாரண மந்திரிகளோ வெளிநாடுகள் போனால், அதைப் பற்றி யாரும் அவ்வளவாகப் பொருட்படுத்துவது இல்லை; அதற்குக் காரணம் இருக்கிறது.

"ராஜ்ய முதன் மந்திரி என்பது மட்டுமல்லாமல் வேறு பல தனித் தகுதிகள் படைத்தவர் அண்ணாதுரை.

"பதவிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாகவே பேரும் புகழும் பெற்ற மிகச் சில இந்தியத் தலைவர்களுள் அவரும் (அண்ணா) ஒருவர்.

"சர்க்கார் கட்சித் தலைவர் என்ற புதிய அந்தஸ்து தவிர, 'அரசியல் கட்சித் தலைவர்' என்ற பெயருடன், 'மக்களின் தலைவர்' என்ற புகழும் படைத்தவர் அவர்.

"இந்தியா முழுமையிலும் காங்கிரசுக்கு அடுத்தபடியாக, ஒரே கட்சி அபரிமிதமான பெரும்பான்மை பெற்று ஸ்திரமான ஆட்சி ஏற்படுத்திய பெருமை அண்ணாதுரையினுடையது.

"இத்தனைச் சிறப்புகளும் பெற்றிருப்பதினாலேயே அண்ணாதுரையின் வெளிநாட்டுப் பயணம் விசேஷ முக்கியத்துவம் பெற்றது.

"மத்திய சர்க்காருடன் அவருக்கு என்ன கருத்து வேற்றுமை இருந்தாலும், வெளியிடத்தில் அதைக் காட்டிக்கொள்ளாததுமட்டுமல்லாமல், அதைச் சிறிதுகூட விட்டுக்கொடுக்காமலும், புகழ்ந்து பேசியும் வந்திருக்கிறார். இந்திரா காந்தியின் தலைமையை அவர், அமெரிக்க மக்களிடை யேஎடை போட்ட ஒன்றே போதும் -- இதற்குச் சான்றாக! அதைப்போலவே, 'மத்திய மட்டத்தில் காங்கிரசுக்கு எதிராக எந்தக் கட்சியும் இப்போதைக்கு பொறுப்புக்கு வரமுடியாது' என அவர் கூறியதும், 'மத்திய மட்டத்தில் கூட்டு சர்க்கார் செயல்பட முடியாது' என அவர் குறிப்பிட்டதும் கவனத்துக்குரியவை.

"போப் ஆண்டவரைச் சந்தித்ததும், பாரீஸ் நகரில் ஐக்கிய நாடுகள் கலாச்சார நிறுவன நிர்வாகிகளைக் கண்டு கலந்து உரையாடியதும், அமெரிக்காவில் யேல் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் தொண்டு ஆற்றியதும், ஜப்பானில் தமிழகத் தொழில் வளம் குறித்து ஆலோசனை நடத்தியதும் அண்ணாதுரையின் வெளிநாட்டுப் பயணத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள்."

—கா. க.

'அண்ணாதுரையின் உலகப் பயணம் நற்பயன்களை விளைவிக்கவல்லது'

'தமிழின் தொன்மையையும் அருமை பெருமைகளையும் சென்ற இடமெல்லாம் படித்த மக்கள் உணரச் செய்தார்'

'பொருளாதாரத் துறையிலும் பயன் தரவல்ல பிரேரணைகளை முதலமைச்சர் கொண்டுவந்திருப்பது குறிப்பிடத்தக்கது'

'பயனுள்ள பயணம்' என்ற தலைப்பில், 'தினமணி' (15—5—68) இதழ், தனது தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ள கருத்துக்களாவன :—

"முதலமைச்சர் திரு. அண்ணாதுரையின் உலகப் பயணம் நற்பயன் விளைவிக்கவல்லது.

இந்தியாவின் ஸ்திரத்தன்மையைப் பற்றி அமெரிக்கருக்கு இருந்த சந்தேகங்களை அவர் அகற்றினார்.

தாம், 'பிரிவினைப் போக்குகளின் எதிரி' என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

'மொழிப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண முடியும்' என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்.

சென்றவிடமெல்லாம் தமிழின் தொன்மையையும், அருமை பெருமைகளையும் படித்த மக்கள் உணரச் செய்தார்.

இவையெல்லாம், ராஜீய-கலாசாரத் துறைப் பணிகள். பொருளாதாரத் துறையிலும் சுவையான--பயன் தரவல்ல பிரேரணைகளை முதல்வர் கொணர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சேலம் உருக்காலை—'ரேனோ' அமைப்பின் சிறிய கார் திட்டம்—விவசாயக் கருவிகளைத் தயாரிப்பதற்கான தொழில் முறைக் கூட்டுத் திட்டம் ஆகியவை, அத்தகைய பிரேரணைகளில் முக்கியமானவை.

'ரேனோ' அமைப்பினர், பிரான்சில் கார்த் தயாரிப்புத் தொழிலில் முதன்மையானவர்கள். 'சிறு கார்த் தயாரிப்புக்கான தொழிற்சாலை ஒன்றை சென்னையில் அவர்கள் அமைத்துக் கொடுக்கத் தயார்' என்பது முதலமைச்சர் கொணர்ந்துள்ள தகவல். அதைப்பற்றிய விவரங்களை அவர் டில்லிக்கு அனுப்பிவைப்பார்.

அந்நிய மூலதனமும் கூட்டுறவும் தேவைப்படும் தொழில்கள் அனைத்துக்குமே மத்திய சர்க்காரின் இசைவும் மனப்பூர்வமான ஒத்துழைப்பும் தேவை. யூனியன் அரசாங்கம் இப்பிரச்சினைகளை முடிவு செய்கையில், சென்னையின் முந்தைய முயற்சிகளையும் இப்போதைய வசதிகளையும் தேவைகளையும், உருவாகியுள்ள பிரேரணைகளையும், கருத்திற் கொண்டு, இங்கு சிறு கார்த் தொழிலொன்று அமைவதற்குத் துணைபுரிய வேண்டும் என்பதுதான் இந்த ராஜ்யத்தவர் விருப்பம்.

இந்தியப் பிரஜைகளல்லாத பணக்கார இந்தியர்கள் ஹாங்காங் உட்பட பல தேசங்களில் தொழில், வர்த்தகத் துறைகளுக்குப் பின்பலமாக இருந்து வருகிறார்கள். அவர்கள் தமது சேமிப்பை இந்தியாவில் விடுமுதல் செய்யத் தயார். ஆனால் போதிய உத்தரவாதம் தேவை என்பது, அவர்கள் திரு. அண்ணாதுரையிடம் தெரிவித்த கருத்து. தமது கோரிக்கைகளை திட்டவட்டமாக உருவாக்கி அனுப்பிவைக்குமாறு அவர்களை திரு. அண்ணாதுரை கேட்டிருப்பது நல்ல யோசனை.

இத்தகைய விடுமுதலை ஈர்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தினால், அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு ஓரளவு குறைவதற்கு வழி பிறக்கும் என்றே தோன்றுகிறது.

மீன் பிடிப்பதற்கான விசைப் படகுகளின் தயாரிப்பு, விவசாயக் கருவித் தொழிற்சாலைகளின் அமைப்பு ஆகியவற்றில் ஜப்பான் நமக்குப் பெரிய அளவில் துணைபுரியக்கூடும் என்று முதலமைச்சர் எதிர்பார்க்கிறார்.

நம் நாட்டில் முக்கியமாகத் தேவைப்படுபவை விவசாயத்துடனும், நாட்டுப்புறத் தேவைகளுடனும் ஒருங்கிணைந்த சிறு தொழில்கள்தாம். அவை பரவலாக ஏற்படுவதன் சாத்தியக்கூறுகளை சில ஜப்பானிய நிபுணர்களின் துணையைப் பெற்று, சென்னை ராஜ்யத்தில் ஆராய்ச்சி நடத்துவது பயனுள்ளதாயிருக்கலாம்.''

'கட்டாயம் வந்தே தீரும்'

என்று கருதப்பட்ட சேலம் உருக்காலைத் திட்டம் 'கிடப்பில்' போடப்பட்டதேன்?

"சேலம் உருக்காலைத் திட்டத்துக்கு விரிவான வடிவமைப்பை ஜப்பானிய நிபுணர்கள் கொடுத்துப் பல ஆண்டுகளாகின்றன!

"பொருள்மைகளும் அநாவசியமான போட்டிகளும் குறுக்கிடாது இருந்திருக்கும்பட்சத்தில், இதற்குள் சேலம் உருக்காலை அமைந்து நல்லபடி நடந்துகொண்டிருக்கக்கூடும்.

"'கட்டாயம் விரைவில் வந்தே தீரும்' என்று கருதப்பட்ட இத்திட்டம், திரு. சஞ்சீவி ரெட்டி யூனியன் உருக்கு மந்திரியானதும், 'கிடப்பில்' போடப்பட்டது.

"ஆந்திரா, மைசூர்ப் போட்டிகளைக் கிளறிவிட்டு, 'எந்தத் தென் பகுதி இராஜ்யத்திலும் உருக்காலை ஏற்படுவதை அந்நியச் செலாவணி நிலைமை அனுமதிக்கவில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

"'சேலம் ஆலைக்கு வேண்டிய அந்நியச் செலாவணி அனைத்தையும் கொடுத்துதவி, அதன் மதிப்புக்குக் கஞ்சமலை இரும்புக் கனிஜத்தை வெட்டி எடுத்துக்கொண்டு போகத் தயார்' என்று திரு. அண்ணாதுரையிடம் ஜப்பானியத் தொழில் துறையினர் கூறியிருக்கிறார்கள். இது அவர்களுக்கும் நமக்கும் ஒருசேரப் பயன்படக்கூடிய இரு வழி நன்மைத் திட்டம்.

"ஏற்கனவே திரு. ஆர். வேங்கடராமனால் உருவாக்கப்பட்ட திட்டந்தான் இப்பொழுது திரு. அண்ணாதுரை கொண்டு வந்திருக்கும் உருப்படியான பிரேரணை.

"யூனியன் சர்க்கார் விரைவில் பரிசீலித்து இத்திட்டம் நடந்தேற வதற்குத் துணைபுரிவர் என்று நம்புவோமாக!"

—'பயனுள்ள பயணம்' என்ற தலைப்பில் 'தினமணி' இதழின் (சென்னைப் பதிப்பு : 15—5—68) தலையங்கத்தில்.

தானியங்களை உலர்த்த புதிய இயந்திரம்!

தானியங்களை-குறிப்பாக நெல்; கோதுமை போன்றவைகளை அறுவடைக்குப் பிறகு கிடங்குகளில் சேமித்து வைக்குமுன் நன்கு உலர்த்த வேண்டும்; இல்லையென்றால், தானியங்கள் கெட்டுவிடும்.

இப்படி உலர்த்துவதற்கும் ஒரு இயந்திரத்தை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறது

நெல் அரைக்கும் இயந்திரம் போன்ற இந்த இயந்திரத்தில் ஒரு பக்கம் தானியத்தைப் போட்டால் இரண்டு அல்லது மூன்று கட்டங்களில் அதன் ஈரம் உறிஞ்சப்பட்டு நன்கு உலர்த்த தானியங்கள் மறுபுறம் விழும்வகையில் இந்த இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒரு மணியில் 10 டன்முதல் 40 டன வரையிலான தானியங்களை இந்த இயந்திரங்கள் மூலம் உலர்த்திவிடலாம்.

தங்கம் கிடைக்காத நாட்டில் செல்வம் கொழிக்கிறதே--ஏன்?

இயற்கைச் செல்வங்கள் குவிந்துள்ளன இங்கு-- 'இல்லாமை' கொட்டுகிறதே--ஏன்?

பிரச்சினைகளை ஆராய்வோம் --- நாட்டை வளப்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாக இருப்போம்!

சென்னைக் கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணு ஆய்வுரை

சென்னை, மே 15—

" நான் சென்ற நாடுகளிலுள்ள பல்வேறு கடற்கரைகளைப் பார்த்தேன்; ஆனல் சென்னைக் கடற்கரையின் அழகில் நூறிலொரு பங்கும் அங்குள்ள கடற்கரைகளில் இல்லை! இப்படிப்பட்ட சென்னைக் கடற்கரையில் வறுமை தாண்டவமாடுகிறது! அங்கே வறுமையில்லை — மாறுக, வளம் இருக்கிறது!

" இங்கே இயற்கையழகு கொஞ்சுகிறது; அதேபோல் இல்லாமையும் கொட்டுகிறதே — ஏன்? அங்கெல்லாம் இயற்கையழகு கொஞ்சவில்லை; அதைப்போலவே இல்லாமையுமில்லை!

" தங்கமே கிடைக்காத நாடு இருக்கிறது — அங்கேதான் செல்வம் கொழிக்கிறது! இரும்பே கிடைக்காத நாடு என்றுலும், உலக நாடுசளுக்கெல்லாம் இரும்புப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறது! மூலிகையே இல்லாத நாடு — அது மருந்துகளைத் தயாரித்தனுப்புகிறது!

" இப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து நம்முடைய நாட்டை வளப்படுத்த என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் நாம் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும் "

இவ்வாறு அண்ணு அவர்கள் மே 13-ல் சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற வரவேற்பு-பாராட்டுப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக்காட்டினுர்கள்; அவர் மேலும் கூறியதாவது:

உள்ளத்தால் உணர்ந்த உண்மையைச் சொன்னேன்

எனது வெளிநாட்டுப் பயணம் பற்றி மாற்றுக் கட்சியினர் ஏதோ சொன்னதாக ம. பொ. சிவஞானம் கூறினுர்.

அவர்கள் நான் உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் வேளையில் 'வெளிநாடுகளில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களைப் பேசுவேனே' என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள்; 'நான் அப்படிப் பேச வேண்டும்' என்ற ஆசையில் சிலர் இருந்தார்கள். அவர்களது ஆசைகளும் அச்சத்துக்கும் மாருக நான் இந்தியாவைப் பற்றிப் பேசினேன்.

வேடிக்கைக்காகவோ, பாவனைக்காகவோ, இராசதந்திரத்திற்காகவோ நான் அப்படிக் கூறவில்லை; உள்ளத்தால் உணர்ந்த உண்மையைத்தான் சொன்னேன்.

இந்திரா காந்தி எப்படி ஆட்சி நடத்துகிருர் என்று அமெரிக்காவிலே கேட்டார்கள்—கண்சிமிட்டிக்கொண்டே கேட்டார்கள். அவர்களது கேள்வியின் பொருளை நான் புரிந்துகொண்டுதான் பேசினேன்.

மாற்றுக் கட்சியினரும் அந்தக் கணக்கைப் போட வேண்டும்

'எதிர்க் கட்சியைச் சார்ந்தவனுயிற்றே—இவன்? இந்திரா எதற்கும் திறமையற்றவர் என்று கூறுவான்' என அவர்கள் எதிர்பார்த்தார்கள்!

ஆனல் நான், 'ஒருவருடைய திறமையான ஆட்சியைக் கணக்கிடவேண்டுமானுல், எந்தச் சூழ்நிலையில் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ருர்கள் என்று பார்த்துத்தான் வெற்றி-தோல்வி பற்றி நிர்ணயிக்க வேண்டும்; மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து நான்காவது திட்டம் உருவாகாத—முடியாத நிலையில்—பொருளாதார மந்தம் ஏர்பட்ட நெருக்கடியான நிலையில்—ஆட்சிப் பொறுப்பை ஏற்றருக்கிருர் இந்திரா; முடிந்த அளவு திறமையான ஆட்சி நடத்துகிருர்' என்று கூறினேன்.

'ஆட்சியின் வெற்றி—தோல்வி பற்றி நிர்ணயிக்கும் முன்பு அந்த ஆட்சிப் பொ[illegible]றுப்பை ஏற்பதற்கு முன்னிருந்த சூழ்நிலையைக் கணக்கிட வேண்டும்' என்று நான் கூறியது, என்னைப் பற்றியும் கணக்கிடத் துணியும் மாற்றுக் கட்சியினரும் இந்தக் கணக்குப் போடவேண்டும் என்பதற்காகத்தான்!

நாட்டின் புகழை மங்கச் செய்திருக்கர்தா?

இங்கேயுள்ள மாற்றுக் கட்சியினர், 'தி. மு. க. ஓராண்டில் என்ன சாதித்துவிட்டது' என்று கேட்டதாக அறிகிறேன்.

நானும் அமெரிக்காவில், 'இந்திராவின் ஆட்சி என்ன சாதித்து விட்டது; ஒன்றுமில்லை' என்று கூறியிருக்க முடியும்

அப்படிச் சொல்லியிருந்தால் அது என் பண்பைக் கெடுத்திருக்கும்: என் இயல்பை மாற்றியிருக்கும். என் நாட்டுப் புகழை மங்கச் செய்திருக்கும்!

ஆனல், நான் அங்கு என் மனத்தில் பட்டதை, பண்புச்கு இயல்புக்கு—நாட்டின் புகழுக்குக் குந்தகம் இல்லாத வகையில் எடுத்துரைத்தேன். 'இந்தச் சிறந்த பண்பாடு தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வரவேண்டும்' என்று எண்ணுகிறேன்.

இந்தப் பண்பாடு தி. மு. கழகத்திற்கு மட்டுமல்லாமல், எல்லாக் கட்சிகளுக்கும் குறிப்பாக நீண்ட காலம் ஆதிக்கத்திலிருந்த கட்சிக்கு வரவேண்டும் என்று விரும்புகிறே[illegible]

அப்போதுதான் இந்[illegible]ாவில் சனநாயகம் கதிரொளி விட்டுப் பரவ முடியும்; அப்போதுதான் தமிழ்நாடும், தமிழினமும், அதை உள்ளடக்கிய இந்தியாவும் புகழ் பெற முடியும்!

நாட்டு மக்களிடத்திலே உள்ள உறுதி—உழைப்பின் மீதிருக்கும் நம்பிக்கை—'நேரத்தை வீணுக்கக் கூடாது என்பதிலுள்ள பிடித்தம்'—இதுவே ஒரு நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணம் எது?

நம்முடைய நாட்டில் பார்த்திருக்கிறேன்; இருவர்-மூவர்-நான்கு பேர் என்று கூடிக் கூடி எதைப் பேசுகிருர்களோ—அது வேறு; ஆனல், பேசிக்கொண்டிருக்கிருர்கள்!

ஜப்பான் நாட்டில் இரண்டுபேர்—மூன்றுபேர் கூடி அங்காடிகளிலோ, தெரு முனைகளிலோ, முச்சந்திகளிலோ நின்று பேசிக்கொண்டிருந்த காட்சியை நான் காணவில்லை!

அமெரிக்காவிலும் இப்படிப்பட்ட நிலை இல்லை. ஓடிக்கொண்டே—உழைத்துக்கொண்டே — உற்பத்திப் பெருக்குவதில் நாட்டமாகவே இருக்கிருர்கள்—மாலை 5-மணிவரை; அதற்குமேல் 11 மணிவரை பல்வேறு களியாட்டம், இசை நிகழ்ச்சி, நாட்டிய அரங்கு போன்றவற்றில் கழிக்கிருர்கள்.

மனிதனையே மது அருந்துகிறது இங்கு!

அவர்கள், மதுபானத்தைக்கூட அதிசமாக அருந்துவதில்லை; அங்கே மதுபானம் அருந்துகிறவர்களையும் பார்த்தேன்; நம் நாட்டில் மதுபானம் அருந்துகிறவர்களையும் பார்க்கிறேன்.

அங்கே அவர்கள் மதுவை அருந்துகிருர்கள். ஆனல் இங்கே அந்தப் பழக்முள்ளவர்களை மது அருந்துகிறது!

பல இடங்களில் விருந்துகளில், கோப்பையிலே கால்வாசி மதுவை ஊற்றிக்கொண்டு ஒரு மணி நேரம்—இரண்டு மணி நேரம் உலகப் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டேஅவ்வப்போது உதட்டை நனைத்துக்கொள்கிருர்கள்! ஏதோ ஒருவித உணர்ச்சி ஏற்படவேண்டும் என்றுதான் அவர்கள் மதுவை உட்கொள்கிருர்கள்; ஆனல் நம்முடைய நாட்டுப் பழக்கம், 'இன்று ஒரு கை பார்த்துவிடுகிறேன்' என்று குடிக்கிருர்கள்!

மதுவிலக்கைத் தளர்த்தமாட்டேன்!

விருந்துகளில், என் விருப்பத்துக்கேற்ப எனக்குப் பழ ரசம்தான் தரப்பட்டது. கால்வாசி மதுவை அவர்கள் ஒரு மணி நேரம் குடிப்பார்கள். ஆனல் எனக்குப் பழ ரசம் தரப்பட்டதும், உடனே எடுத்துக் குடித்துக் கொண்டிருந்தேன். அவர்களும் மறுபடியும் மறுபடியும் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஏற்காடு நண்பர் ராஜேஸ் என்பவர்தான் எனக்குச் சொன்னர்—'உடனுச்குடன் குடித்துவிடக் கூடாது' என்று! அப்போதுதான் எனக்கு அந்தப் பழக்கமே வந்தது!

பழ ரசத்தையே உடனுக்குடன் நான் குடித்துவிட்டேன் என்ருல், நம்முடைய நாட்டில் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டால் என்ன நடக்கும்? ஆகவே, 'மதுவிலக்கைத் தளர்த்துவதில்லை' என்ற உறுதியோடு நான் திரும்பியிருக்கிறேன்!

அருந்தாமலே நான் பெறுவதற்கு இயலும்!

பெண்மணி ஒருவர் அமெரிக்காவில் என்னிடம் கேட்டார்—'மதுவை அருந்தினுல்தான் என்ன' என்று; அவர் புரிந்துகொள்ளும் விதத்தில் நான் பதிலளித்தேன்—'மதுவை அருந்தி என்ன உணர்ச்சியை நீங்கள் பெறுகிறீர்களோ அந்த உணர்ச்சியை, அருந்தாமலே என்னுல் பெற முடியும் என்ற நிலை இருக்கும்போது, ஏன் அருந்த வேண்டும்' என்று; அவர் அதற்கு எந்தவிதப் பதிலும் அளிக்கவில்லை; என்ருலும், அவர் குடிப்பதை நிறுத்தவில்லை -- சாப்பிட்டுக் கொண்டேதான் இருந்தார்!

மாலையிலே களியாட்டங்களிலே தெம்பு பெற்று காலையிலே அவர்கள் வண்டுபோல் பணியாற்றுகிருர்கள்! அதன் விளைவாகத் தேசிய உற்பத்தி பெரிய அளவுச்கு வளர்ந்திருக்கிறது.

பெரும் வியப்புமிக்க ஜப்பானின் வளர்ச்சி

வளர்ச்சித் துறையில் உலகத்திலேயே ஜப்பான் நான்காவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

அமெரிக்கா, சோவியத் இரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அடுத்து எந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கி வளர்ச்சி நிலை அடைய முடியுமோ அந்த நிலையை ஜப்பான் அடைந்திருக்கிறது.

நான் அங்கே சென்றபோது, கட்டி முடிக்கப்படாமலிருந்த கப்பலைக் கட்டி முடித்து, அமெரிக்க நாட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள்! ஆஸ்திரேலிய நாட்டுக்கு இரும்புச் சாமான்களை அனுப்பிக்கொண்டிருந்தனர்!

விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் ஜப்பான் அடைந்திருக்கின்ற வளர்ச்சிதான் எனக்குப் பெரும் வியப்பைத் தந்தது

கான்சாஸ் நகரில் மாணவர்கள், பேராசிரியர்கள் அடங்கிய கூட்டத்தில் பேசும்போது தெளிவாக நான் தெரிவித்தேன் — 'அமெரிக்காவின் முன்னேற்றத்தைக் கண்டு நான் அதிக ஆச்ரியப்படவில்லை' என்று! ஏனென்ருல், இந்தியாவைவிட அமெரிக்க நாடு பெரியது! இயற்கை வளமும் இந்தியாவைவிட அங்கே அதிகம்!

வளம் பெற்றிருந்த நாடு சுரண்டப்பட்டுவிட்டது

'தமிழகம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் வாணிபம் செய்த நாடு; 'மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கியம் படைத்த நாடு' என்று சொல்லுவதில் தொக்கியிருப்பது—'தலைமுறை தலைமுறையாக, வழி வழியாக வளம் பெற்றிருந்த நாடு, இன்று இளைத்தும் களைத்தும் போயிருக்கிறது; இயற்கை வளமெல்லாம் சுரண்டப்பட்டுவிட்டது' என்பதுதான்!

ஆனல், அமெரிக்கா அப்படிப்பட்டதல்ல; இருநூறு—முந்நூறு ஆண்டுகளாக வளமான பூமிதான்!

நம்முடைய நாடு, ஔவைப் பிராட்டியைப் போன்றது; வயது அதிகமானுலும் மாண்பு குறையாத நாடு நம்முடைய நாடு!

நம் நாட்டைவிட அளவில் பெரியது அமெரிக்கா; ஆனல், நம்முடைய மக்கட் தொகையில் நான்கில் ஒரு பங்குதான் அமெரிக்காவில் இருக்கிறது!

நம்முடைய நாட்டை எதனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது?

வெள்ளைக்காரன் இந்நாட்டை நம்மிடம் விட்டுவிட்டுப் போனபோது 40 கோடியாக இருந்த மக்கள் தொகை, இப்போது 55 கோடியாக வளர்ந்திருக்கிறது! கண்ணைமூடித் திறக்கு முன்னே 58 கோடி அளவுக்கு மக்கள் தொகை உயரும் நிலை இருக்கிறது!

அப்படிப்பட்ட அமெரிக்காவுக்கும்—நம்முடைய நாட்டுக்கும் உவமை பார்ப்பதைவிட, நம்முடைய நாட்டையும் ஜப்பானையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

உழைப்புக்கு மதிப்பு அங்கே இருக்கிறது!

எரிமலைக் குமுறலும், பூகம்பமும் ஏற்படும் நாடு ஜப்பான். ஒரு நாள் நான் படுத்துக்கொண்டிருந்தபோது, இலேசாகப் பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும்; கட்டிலிலே படுத்திருந்த நான், கட்டிலின் ஓரத்திலே தள்ளப்பட்டிருந்தேன்; இதுபற்றி ஓட்டல்காரரிடம் கேட்டபோது, 'இது சாதாரணமாக நடக்கக் கூடியதுதான்; நீங்கள் பயப்படாதீர்கள்' என்ருர்!

அப்படிப்பட்ட நாடு இன்றையத் தினம் முன்னேற்றமடைந்திருக்கிறதென்ருல், 'நாட்டுமக்களிடத்

(4-ம் பக்கம் பார்க்க)

உறுதி இருந்தால்தான் வளர்ச்சி நிலையை அடைய இயலும்!

சென்னை, மே 15—

" ஒரு நாட்டின் முன்னேற்றம், 'இந்தவித அரசியலால்தான் உருவாகும்' என்பதல்ல!

" நம்முடைய நாட்டுத் தலைவர்களால் சமதர்மம் பெரிய அளவில் பேசப்படுகிறது; ஆனல் இந்தச் சமதர்மத்தின் உற்ற நண்பர்களாக இருப்பவர்கள், முதலாளிகளாகத்தான் இருக்கிருர்கள்!

" இதை நான் குற்றச்சாட்டுக்காகக் கூறவில்லை; எங்கெந்த முதலாளிகள் யார் யாருககுப் பணம் கொடுத்திருக்கிருர்கள் என்ற புள்ளிவிவரத்தை ஆதாரமாகக் கொண்டுதான் சொல்கிறேன்.

" ஒரு நாட்டின் முன்னேற்றம், சமதர்மத்தாலா -- முதலாளித்துவத்தாலா என்பதல்ல; நாட்டு மக்களிடத்தில், 'நாடு முன்னேற வேண்டும்' என்ற உறுதி இருக்க வேண்டும்! 'நாடு முன்னேற வேண்டும்' என்ற எண்ணம்—விருப்பம்—வேட்கை ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்!

" அமெரிக்காவின் முன்னுள் குடியரசுத் தலைவர் கென்னடி ஒரு முறை குறிப்பிட்டார்—'உன்னுடைய நாடு உனக்கு என்ன தரப்போகிறது என்பதல்ல; உன்னுடைய நாட்டுக்கு நீ தர வேண்டியது என்ன என்பதைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும்' என்று!

" அதுபோல், 'நாட்டுக்கு நீ என்ன செய்யப்போகிருய்' என்று கேட்பதைவிட, 'நாட்டுச்கு நாம் என்ன செய்யப்போகிறேம்' என்ற உறுதியினை மேற்கொண்டாக வேண்டும், அப்போதுதான்—பதினைந்து ஆண்டுக்காலத்தில் ஜப்பான் நாடு பெற்ற அந்த வளர்ச்சி நிலையை நாம் அடைய முடியும்!"

---முதலமைச்சர் அண்ணு

(கடற்கரைக் கூட்டத்தில்)

தொல்காப்பிய இலக்கண நூல்---
வெளிநாட்டுப் பேராசிரியர்கள் வியப்பு !

முதலமைச்சர் அண்ணா தந்த தகவல்

சென்னை, மே 13—

"நான் சென்ற இடங்களிலுள்ள பேராசிரியர்களுக்கும், மற்ற பிற தலைவர்களுக்கும், ஜி. யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த திருக்குறளையும், தொல்காப்பியத்தையும், கருணாநிதியின் சிலப்பதிகார மொழி பெயர்ப்பையும் தந்தேன்.

தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்தது என்பதைக் கேட்டு அந்தப் பேராசிரியர்கள் வியப்படைந்தார்கள்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் உரையாடுகையில் தெரிவித்தார். செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அண்ணா அளித்த பதில்களும் வருமாறு :—

முன்பே படித்திருப்பதால் புதிதாகத்தோன்றவில்லை

நிருபர் :—" நியூயார்க்கின் இரவு வாழ்க்கையைப் பார்த்தீர்களா"

அண்ணா :—" பிராட்வே பகுதியில் நான் இரவில் காரில் சென்றேன். அமெரிக்காவைப் பற்றி முன்பே படித்திருப்பதாலும், ஆங்கிலத் திரைப் படங்கள் அமெரிக்க வாழ்வைப் பற்றி அதிகம் தெரிவிப்பதாலும், நியூயார்க்கைப் புதிதாக முதல் முறையாகப் பார்ப்பது போன்ற உணர்வே தோன்றவில்லை; இரண்டாம் முறையாகப் பார்ப்பது போன்ற உணர்வே ஏற்பட்டது."

தமிழகத்து டாக்டர்களுக்கு புகழ்மாலை சூட்டினர்

நிருபர் :—" அமெரிக்காவில் தங்கள் உடல் நிலையைச் சோதித்தீர்களா ?"

அண்ணா :—" யேல் பல்கலைக் கழகத்தில் என் உடல்நிலையைப் பரிசோதித்தேன். இங்கிருந்து என் உடல் நிலையைப் பற்றிய டாக்டர் இரத்தின வேலு சுப்பிரமணியம் மற்றும் பல டாக்டர்களின் குறிப்புக்களை எடுத்துச் சென்றேன். அதே பரிசோதனைக் குறிப்புக்களைத்தான் அவர்களும் தந்தனர்; அதே மருந்தைத்தான் அவர்களும் சொன்னார்கள்.

இந்த ஒற்றுமையை அந்த டாக்டர்களிடம் கூறியபோது, அவர்கள், நம் தமிழகத்து டாக்டர்களின் திறமைபற்றி நல்ல கருத்துத் தெரிவித்தனர்.

வசதியும் வாய்ப்பும் இருக்கிறதா இங்கு ?

ஹவாய் தீவில் வெப்ப நாடுகளின் விவசாயக் கல்லூரியைப் பார்வையிட்டேன்; கோவை விவசாயக் கல்லூரியில் படித்த மாணவர்கள், சிறப்பு ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார்கள்; சிலர், குறிப்பிட்ட பழங்கள் பற்றிக் கூட ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

அதுபோல், பல்கலைக் கழகங்களில் இந்தியர்கள் சிறப்பு ஆராய்ச்சிகளை நடத்துகிறார்கள். உதாரணமாக நாம் இங்கு ஆங்கில இலக்கியம் என்று மொத்தமாகப் படிக்கிறோம்; அங்கு அவர்கள், நூற்றாண்டு ஆங்கில மொழியின் வளர்ச்சி பற்றித் தனித் தனியாகச் சிறப்பு ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

இவ்விதம் ஒவ்வொரு துறையிலும் அவர்கள் நம் நாட்டிலில்லாத சிறப்பு ஆராய்ச்சிகளை நடத்தித் தேர்ச்சி பெறுகிறார்கள்.

அவர்கள் நம் நாட்டிற்கு வர ஆசை கொண்டிருந்தாலும், அவர்களின் சிறப்பு அறிவைப் பயன்படுத்தும் வசதியும் வாய்ப்பும் இருக்கிறதா என்பது ஆலோசிக்கவேண்டிய ஒன்றாகும்."

ந. தருமலிங்கம்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

மே 16 : முத்துப்பேட்டை; 17 : கீரக்களூர், கருப்பம்புலம்; 18 : மதுக்கூர்; 19 : கடியாச்சேரி; 20 : தாணிக்கோட்டகம், திருப்பூண்டி; 21 : திருத்துறைப்பூண்டி; 22 : நத்தம்; 23 : மடப்புறம், திருத்துறைப்பூண்டி; 24 : முத்துப்பேட்டை.

திட்டங்களை நிறை வேற்றுவதில் தாமதம் ஏன் ?

காஞ்சிபுரம், மே 14—

" பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அரசாங்க அமைப்பு துரிதமாக இயங்க வேண்டும்.

" மாநிலத்திலும் -- மத்தியிலும் இரு வேறு நோக்கம்கொண்ட அமைச்சர்கள் இருப்பதால், பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது ; எனவே, இத்துறையில் அரசியல் சட்டத்தைத் திருத்தியமைப்பது அவசியம்."

---அறிஞர் அண்ணா

தங்கம் கிடைக்காத....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திலே உறுதி இருக்கிறது ; உழைப்பின்மீது நம்பிக்கை இருக்கிறது என்பதுதான் காரணம்.

'உழைத்தால் முன்னேற முடியும்' என்ற உறுதி அவர்களிடம் வளர்ந்திருப்பதுபோல் நம்மிடமும் வளர்ந்தாக வேண்டும் !

கருத்து செலுத்துவேன்

இந்தப் பயணத்தின்மூலம் எனக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு, தமிழ்நாட்டை வளப்படுத்த முனைவதோடு இந்த நாட்டின்மூலம் இந்தியாவும் வளம் பெற கருத்துச் செலுத்துவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

அல்லலற வாழ்வு இனிக்க எல்லோரும் உணவு உடை உறையுள் கல்வி வசதிகள் பெற்றுச் சிறக்க ஒவ்வொருவர் குடும்பமும் அளவாக இருத்தலே நல்லது. இன்ப வாழ்வுக்கு ஓர் இரு குழந்தைகள் இருந்தாலே போதும்.

வெளியீடு : மாநில குடும்ப நலதிட்ட அமைப்பு
சுகாதார, குடும்ப நலதிட்ட இயக்குநர் அலுவலகம்
சென்னை-6.

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

17--5--68

சின்னதாராபுரம்

தி. மு. க. சார்பில் இரவு 7-30 மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர் : பு வெ. இராமசாமி; பேசுவோர் : துரை முருகன், ஆர். என். ரகிமான், இரா. கிருட்டிணசாமி, மற்றும் பலர்.

அறிஞர் அண்ணா டெல்லி பயணம்

சென்னை, மே 15—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், 16—5—68 காலை 9-மணியளவில், டெல்லிக்கு விமானம்மூலம் செல்லுகிறார்.

அன்று மாலை 4-மணியளவில் டெல்லியில் அவர், மத்திய வர்த்தக அமைச்சர் தினேஷ்சிங்கை சந்திப்பார் ; கோவை மாவட்டத்தில் நிலவும் பஞ்சாலை நெருக்கடி குறித்தும், ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப் போக்குவது குறித்தும் விவாதிப்பார்.

மே 17, 18 ஆகிய இருநாட்களிலும் தேசிய வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வார்.

மே 19-ம் நாள் டெல்லியில் தங்கிவிட்டு மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்டு பிற்பகல் 1 மணியளவில் சென்னை வந்து சேருவார்.

மறைவு

சென்னை 5-வது வட்ட தி. மு. க. உறுப்பினரும், சின்னசாமி மன்ற செயற்குழு உறுப்பினருமான சீராமுலு அவர்கள், 13—5—68-ல் இயற்கை யெய்திய செய்தி, 5-வது வட்ட கிளைக் கழகச் சார்பில் ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவித்துக்கொள்ளப்படுகிறது. அன்னார் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவிக்கப்படுகிறது.

செங்கற்பட்டு நகர தி. மு. க. முன்னாள் செயலாளரும் கே. வி. கே. சாமி படிப்பகத்தின் உறுப்பினருமான திரு. கே. நவநீதநாதன் அவர்கள் மே 13-ம் மாரடைப்பினால் இறந்துவிட்டார். இன்று நடைபெற்ற சவ ஊர்வலத்தில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் ஏராளமாகக் கலந்துகொண்டனர். மறைந்த தோழருக்கு இறுதி வணக்கம் செலுத்தும்வகையில் நகரக் கழகச் சார்பிலும், பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பெரியபாளையம் — ஆரணி தி. மு. கழகத்தின் நீண்ட நாள் உறுப்பினரான தோழர் மல்லிகா அர்ச்சுனன் 12—5—68-ல் அகால மரணமடைந்த செய்தி ஆரணி தி. மு. க. சார்பில் ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது. அன்னார் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாகச் சீர்திருத்தக் குழு--- வெறும் கண்துடைப்பு ஏற்பாடு?

பரிந்துரைகளை டில்லி மதிக்கவில்லை !

குழுவின் தலைவரே மனம் குமுறுகிறார் !

புதுடில்லி, மே 14—

" நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபாரிசுகளை அரசு அலட்சியம் செய்து வருகிறது ; அதன் சிபாரிசுகளை மதிக்காமலிருப்பதென்றால், இந்தக் குழுவை நியமித்திருப்பதில் என்ன பயன் உண்டு ?"

என்று குழுவின் தலைவர் கே. அனுமந்தையா, மத்திய அரசின் போக்கைச் சுட்டிக்காட்டி வினவினார்.

பொருளைப்பற்றி ஒன்றுமே தெரியாத ஒரு நபரை அண்மையில், பொதுத் துறையைச் சேர்ந்த ஒரு பெரிய நிறுவனத்தின் டைரக்டர்கள் குழுவில் ஒருவராக நியமித்திருப்பதை, அரசின் அலட்சியத்திற்கு உதாரணமாக அனுமந்தையா சுட்டிக் காட்டினார்.

" அரசாங்கம் நடத்தும் தொழில் நிறுவனங்களின் டைரக்டர்கள் குழுவில் தொழில் நுட்பத் தகுதி வாய்ந்தவர்களையே உறுப்பினர்களாக நியமிக்கலாம்" என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்திருந்தது. சிறந்தவர்களை நியமனம் செய்யும் முறைகளைப் பற்றியும் விளக்கியிருந்தது.

திரு. அனுமந்தையா மேலும் கூறியிருப்பதாவது :—

" குழுவின் சிபாரிசுகளை மதிக்காமல் பொதுத்துறை தொழில் நிறுவனத்தின் டைரக்டர்கள் குழுவுக்கு சிறிதும் தகுதியில்லாத ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இம்மாதிரியான இன்னும் ஒன்றிரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தால், குழு அதோகதியாக வேண்டியதுதான் !"

மருத்துவமனையில் ஏ. கோவிந்தசாமியை சந்தித்தார்

சென்னை பெரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களை, முதலமைச்சர் அண்ணா அவர்கள் சந்தித்து, அவரது உடல் நலம் பற்றி விசாரித்தார்.

அவருடன் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி இரா. செழியன் எம்.பி., அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் சென்றிருந்தனர்.

கண்ணம்மா--தங்கராசு

கலை நிகழ்ச்சிகள்

மே 18 : சேலூர் ; 19 : அடியக்கமங்கலம் ; 20 : திருப்பூண்டி ; 21 : இ. வெள்ளனூர் ; 26 : திருமயம் ; 30 : புளியங்குளம்.

தொடர்பு முகவரி :—33, லெட்சுமிபுரம் 7-வது தெரு, மதுரை-1.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

மே 16 : உத்தமபாளையம் ; 17, 18 : மதுரை ; 19 : பட்டுக்கோட்டை ; 20 : பாப்புநாயக்கன் பட்டி ; 22 : இராமேசுவரம் ; 24 : இராமச்சந்திரபுரம் ; 26 : மதுரை ; 27 : கலிங்கப்பட்டி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.